வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017
# Term Examination, November- 2017

| தரம் :- 13 (2018) | பொருளியல் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 11) 3 | 21) 3 | 31) 3 | 41) 4 |
| 2) 2 | 12) 4 | 22) 3 | 32) 1 | 42) 2 |
| 3) 2 | 13) 3 | 23) 5 | 33) 3 | 43) 3 |
| 4) 4 | 14) 4 | 24) 5 | 34) 4 | 44) 3 |
| 5) 4 | 15) 3 | 25) 1 | 35) 1 | 45) 2 |
| 6) 1 | 16) 1 | 26) 3 | 36) 5 | 46) 1 |
| 7) 2 | 17) 2 | 27) 2 | 37) 4 | 47) 1 |
| 8) 5 | 18) 2 | 28) 2 | 38) 3 | 48) 4 |
| 9) 2 | 19) 4 | 29) 2 | 39) 3 | 49) 2 |
| 10) 4 | 20) 3 | 30) 3 | 40) 4 | 50) 1 |

The National e-learning Portal for The General Education

## பகுதி - II

1)

1. எல்லை செலவையும் எல்லை நலனையும் ஒப்பிட்டு தர்க்கரீதியாக சிந்தித்தல் பொருளியல் ரீதியாக சிந்தித்தல் எனப்படும்.
   எல்லைச் செலவினை விட எல்லை நலன் உயர்வாக இருக்குமாயின் ஓர் தீர்மானம் மேற்கொள்ளப்படும், எல்லைச் செலவும் எல்லை நலனும் சமனாக இருக்குமாயின் தீர்மானம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும், எல்லைச் செலவினை விட எல்லை நலன் குறைவாக இருக்குமாயின் தீர்மானம் கைவிடப்படும்.
   (4 புள்ளிகள்)
2. நிகழ்கால நுகர்வினைத் தியாகம் செய்யும் போது சேமிப்பு அதிகரிக்கும் சேமிப்பு அதிகரிக்கும் போது முதலீடு அதிகரிக்கும் முதலீட்டில் ஏற்படும் அதிகரிப்பு முலதன இருப்புக்கு வழிவகுக்கும். (4 புள்ளிகள்)
3. 

| மெய்மூலதனம் | சுழலும் மூலதனம் |
|---|---|
| நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் செலவு | மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் செலவு |
| மீண்டும் மீண்டும் உற்பத்திக்கு பயன்படுத்தலாம் | ஒரு முறை மட்டுமே உற்பத்தியில் பயன்படுத்த முடியும் |
| பெறுமானத் தேய்வுக்கு உட்படும் | அழிவடையும் |

(3 புள்ளிகள்)

4.

அ) நிலம்
ஆ) உழைப்பு
இ) மூலதனம்
ஈ) மூலதனம்
உ) நிலம்
ஊ) நிலம்
ஏ) மூலதனம்
ஏ) நிலம்
ஐ) நிலம்
ஒ) நிலம் (5 புள்ளிகள்)


1.

| | |
|---|---|
| பொருளாதார வளம் | பொருளாதாரம் அல்லா வளம் |
| அமையச் செலவுடன் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் வளம் | அமையச் செலவின்றி உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் வளம் |
| விலை காணப்படும் | விலை காணப்படாது |
| அருமையானது | மிகையானது |
| தனிநபர் உரிமை பாராட்ட முடியும் | தனிநபர் உரிமைபாராட்ட முடியாது |
| நிரம்பல் வரையறுக்கப்பட்டது | நிரம்பல் வரையறையற்றது |

(4 புள்ளிகள்)

2)

1. ஒரு நாடு உற்பத்திச் சாத்திய வளைகோட்டுக்கு வெளியில் உற்பத்தியினை மேற்கொள்ள முடியாது இருப்பினும் ஒப்பீட்டு நன்மையின் அடிப்படையில் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதன் ஊடாக நாடு தனது இயலுமைக்கு மேலதிகமாக நுகர்வு செய்ய முடியும்.





வரைபடத்தின் படி புள்ளி a யில் நாடு உற்பத்தியினை மேற்கொள்ள முடியாது. எனவே புள்ளி b யில் உற்பத்தியினை மேற்கொண்டு $Y_1 - Y_0$என்ற அளவு Y பொருளை ஏற்றுமதி செய்து வெளிநாட்டில் இருந்து $X_2 - X_0$ என்ற அளவு X பொருளை இறக்குமதி செய்கின்றது. இதன் விளைவாக நாடு தனது இயலுமைக்கு மேலாக $X_1 - X_2$ என்ற அளவு X பொருளை நுகரக் கூடியதாகவுள்ளது


(4 புள்ளிகள்)

2.


ஆ.

அ.








இ.





5

ஈ.




The National e-learning Portal for The General Education

உ.





(5 புள்ளிகள்)

3.

1. வளங்கள் அருமையாக இருத்தல்
2. வளங்கள் மாற்றுப்பயன்பாடு உடையதாக இருத்தல் (02 புள்ளிகள்)

4.

அ)




(4 புள்ளிகள்)

ஆ) அருமை (1 புள்ளி)


வரையறையற்ற மனித விருப்பங்களுடன் ஒப்பிடும் போது அவற்றினை பூர்த்தி செய்வதற்கு தேவையான வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதே அருமை ஆகும் (1 புள்ளி)

இ) சாத்தியமற்றது (1 புள்ளி)

பொருளாதாரம் வளர்ச்சியடைந்து செல்வும் போது விருப்பங்களும் அதிகரித்துச் செல்லும் என்பதனால் அருமை பிரசனை தொடர்ந்தும் காணப்படும். (2 புள்ளிகள்)

3)

1. பொருட்கள் சேவைகள் மீது அரசாங்கம் வரியினை விதிக்கும் போது ஏற்படும் சமூக நலன் இழப்பு வரியின் மிகைச் சுமை எனப்படும். (2 புள்ளிகள்)





வரைபடத்தில் A + B ஆகிய முக்கோண பகுதியே வரியின் மிகைச்சுமை ஆகும். (2 புள்ளிகள்)

The National e-Learning Portal for the General Education


2.

1. நிரம்பல் சாதாரன நிலையில் இருக்கும் போது கேள்வி நெகிழ்ச்சி முடிவிலியாக இருத்தல் (1 புள்ளிகள்)




(1½ புள்ளி)

2. கேள்வி சாதாரன நிலையில் இருக்கும் போது முற்றாக நெகிழ்வற்ற நிரம்பல் காணப்படும் போது (1 புள்ளி)




(1½ புள்ளி)

3.

அ) p = 10, Q = 300

ஆ) நு . மி = 2250 , உ . மி = 2500

இ) பொ. மிகை = 4750

ஈ) நுகர்வோன் = 2 ரூபா , உற்பத்தியாளன் = 4 ரூபா


உ) நுகர்வோன் = 520 ரூபா , உற்பத்தியாளன் = 1040 ரூபா

ஊ) வரியின் மிகைச்சுமை = 120 06 புள்ளி


4. ஊழிய நிரம்பல் நெகிழ்ச்சி மாறுபடுவதற்கேற்ப காரணி உடைமையாளர்கள் பெறுகின்ற மாற்றல் கட்டணங்கள், சிக்கன வாடகை என்பன மாறுபடும் விதத்தினை பின்வருமாறு விளக்கமுடியும்

நெகிழ்ச்சியுள்ள நிரம்பல் காணப்படும் போது உற்பத்திக் காரணி பெறுகின்ற வருமானங்களில் பெரும்பகுதி மாற்றல் கட்டணமாகவும் சிறுபகுதி சிக்கன வாடகையாகவும் காணப்படும்.

நெகிழ்ச்சியற்ற நிரம்பல் காணப்படும் போது உற்பத்திக் காரணி பெறுகின்ற வருமானங்களில் பெரும்பகுதி சிக்கன வாடகையாகவும் சிறுபகுதி மாற்றல் கட்டணமாகவும் காணப்படும்.





அலகு நிரம்பல் நெகிழ்ச்சி காணப்படும் போது உற்பத்திக் காரணி பெறுகின்ற வருமானத்தில் சிக்கன வாடகையும் மாற்றல் கட்டணமும் சமஅளவாகக் காணப்படும்.




முற்றாக நெகிழ்ச்சியற்ற நிரம்பல் காணப்படும் போது உற்பத்திக் காரணி பெறுகின்ற வருமானம் முழுவதும் சிக்கன வாடகையாகக் காணப்படும்.

முடிவிலி நிரம்பல் நெகிழ்ச்சி காணப்படும் போது உற்பத்திக் காரணி பெறுகின்ற வருமானம் முழுவதும் மாற்றல் கட்டணமாகக் காணப்படும்.




The National e-learning Portal for The General Education

4)

1. உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்கும் இடையிலான தொடர்பினை ஆய்வு செய்யும் கோட்பாடு உற்பத்திக்கோட்பாடு எனப்படும்

   Q = F ( K L )
   Q – வெளியீடு
   K – முதல் } உள்ளீடு
   L - உழைப்பு } உள்ளீடு
   F – தொழிற்பாடு


   03 புள்ளி

2.
   அ) குறுங்காலம்
   ஆ) நீண்டகாலம்
   இ) நீண்டகாலம்
   ஈ) நீண்டகாலம்
   உ) குறுங்காலம்

   05 புள்ளி

3. சராசரி மொத்தச் செலவு வீழ்ச்சியடைந்து செல்லும் போது எல்லைச் செலவு சராசரி மொத்தச் செலவுக்கு கீழ் காணப்படும். சராசரி மொத்தச் செலவு அதிதாழ்ந்த நிலையினை அடையும் போது எல்லைச் செலவு அதற்கு சமனாக காணப்படும். சராசரி மொத்தச் செலவு அதிகரித்துச் செல்லும் போது எல்லைச் செலவு அதற்கு மேல் காணப்படும்.

   02 புள்ளி




02 புள்ளி

4.
   அ) நிலையான செலவு
   ஆ) நிலையான செலவு
   இ) நிலையான செலவு
   ஈ) நிலையான செலவு
   உ) மாறும் செலவு
   ஊ) மாறும் செலவு
   எ) மாறும் செலவு
   ஏ) நிலையான செலவு
   ஐ) மாறும் செலவு
   ஒ) நிலையான செலவு

   10 புள்ளி

5)

1.
   1. தொழிலில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை
   2. உற்பத்திசெய்யும் பொருளின் தன்மை
   3. பிரவேச சுதந்திரம்
   4. ஒவ்வொரு நிறுவனமும் கொண்டுள்ள தனியுரிமை சக்தியின் அளவு
   5. நிறுவனம் ஒன்று சந்தை விலையை தீர்மானிப்பதில் கொண்டுள்ள செல்வாக்கு

   04 புள்ளி

2.

1. எண்ணிலடங்காத நிறுவனங்கள் காணப்படுதல்
2. ஓரினத்தன்மை வாய்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்படுதல்
3. நுகர்வோன் பூரண பகுத்தறிவுடையவனாக இருத்தல் 03 புள்ளி

3. சராசரி மாறும் செலவுக்கு மேல் வரும் எல்லைச் செலவுக் கோட்டின் எந்தவொரு புள்ளியிலும் நிறுவனம் தொடர்ந்து இயங்குவதற்கு தேவையான குறைந்த பட்ச இலாபம் கிடைக்கும் என்பதனால் சராசரி மாறும் செலவுக்கு மேல் வரும் எல்லைச் செலவுக் கோட்டின் எந்தவொரு புள்ளியும் இலாப உச்சப்படுத்தல் புள்ளி என அழைக்கப்படுகின்றது. (வரைபடம் முக்கியம்)
05 புள்ளி

4. ஒவ்வொரு நிறுவனமும் தாம் உற்பத்தி செய்யும் பொருட்களை மற்றைய நிறுவனத்தின் உற்பத்திப் பொருளில் இருந்து வேறுபடுத்தி காட்டுவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளே பொருள்பேதப்படுத்தல் எனப்படும். ஒவ்வொரு நிறுவனமும் பொருள்பேதப்படுத்தலினை பின்வரும் மூன்று அடிப்படையில் மேற்கொள்கின்றன.
01 புள்ளி

1. பொருளின் தரம்
2. பொருளின் விலை
3. சந்தைப்படுத்தல் வியூகம் 03 புள்ளி

5. உற்பத்திக் காரணி ஒன்று பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக வழங்கப்படும் குறைந்த பட்சக் கொடுப்பணவு அல்லது இழிவுக் கட்டணம் மாற்றல் கட்டணம் எனப்படும். அதாவது உற்பத்திக் காரணியை அதன் தற்போதைய உபயோகத்தில் தொடர்ந்தும் வைத்திருப்பதற்காக வழங்க வேண்டிய ஆகக் குறைந்த கொடுப்பனவை இது குறிக்கும். மாற்றல் கட்டணம் உற்பத்திக் காரணியின் அமையச்செலவுக்கு சமனாக இருப்பதனால் உண்மையில் இது ஒரு வருமானம் அல்ல செலவு ஆகும் எனவே தான் மாற்றல் கட்டணமானது ஒரு செலவு எனப்படுகின்றது. 04 புள்ளி

6)

1.

அ) மானியம் நீங்கலாக உற்பத்தி மீதான வரி கூட்டல்
ஆ) மானியம் நீங்கலாக உற்பத்தி மீதான வரி மற்றும் வெளிநாட்டு தேறிய முதல் நிலை வருமானம் கூட்டல்
இ) பெறுமானத்தேய்வு கழித்தல் மற்றும் வெளிநாட்டு தேறிய முதல் நிலை வருமானம் கூட்டல்
ஈ) மானியம் நீங்கலாக உற்பத்தி மீதான வரி கூட்டல் மற்றும் தனியார் நுகர்வுச்செலவு மற்றும் அரச நுகர்வுச் செலவு கழித்தல்
உ) மானியம் நீங்கலாக உற்பத்தி மீதான வரி கூட்டல் மற்றும் தேறிய ஏற்றுமதி கழித்தல் 04 புள்ளி

2. அரசாங்கம் செலுத்தும் வட்டிக்கொடுப்பணவுக்கு சமனான உற்பத்தி நடைமுறை ஆண்டில் இடம்பெறுவதில்லை என்பதனால் தேசிய வருமானக் கணக்கீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை
04 புள்ளி

3.

1. பொருளாதார வளச்ச்சியினை அளவிடப் பயன்படும்
2. மக்களின் வாழ்க்கைத் தரத்தினை அளவிடப் பயன்படும்
3. பொருளாதாரக் கட்டமைப்பினையும் கட்டமைப்பு மாற்றத்தினையும் அளவிடப் பயன்படும்
4. உற்பத்திக் காரரணிகளுக்கிடையிலான வருமானப் பரம்பலை அளவிடப் பயன்படும்.
03 புள்ளி

4.

அ) மொ.உ.. கே = (30 + 60 + 20 ) + 25 - (- 10) = 145
ஆ) மொத்த வெளிநாட்டு கேள்வி = (50 – 60) = - 10
இ) மொத்தக் கேள்வி = ( 30 + 60 + 20 ) + 25 = 135
ஈ) மொத்த தேசிய செலவு = 135 + ( -10 ) = 125
உ) செ.வி.கூ.மொ.தே.வ. = 125 + 5 = 130
ஊ) தேசிய வருமானம் = 125 – 25 – 30 = 70

06 புள்ளி

5.

1. தனியார் நுகர்வுச் செலவு
2. தனியார் முதலீட்டுச் செலவு
3. அரசகொள்வனவு
4. தேறிய ஏற்றுமதி 02 புள்ளி

7)

1.

1. மொத்த வருமானம் மொத்தச் செலவுக்கு சமனாக காணப்பட வேண்டும்
2. உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சலுக்கு சமப்பட வேண்டும் 02 புள்ளி

2.

அ) பூச்சியம் ( 0 )

ஆ) 100

இ) Y = 0.8 Y + 100

Y – 0.8Y = 100

0.2 Y = 100

Y = 100 / 0.2

Y = 500

ஈ) Ke = 1 / 1 – mpc

= 1 / 1 – 0.8

= 5

உ)

E = 100 + 0.8 Y

E = 100 + 0.8 x 1000

E = 900

ஆகவே

வருமானம் செலவு = 1000 – 900 = 100 02 புள்ளி

3.

அ) Y = 1360

ஆ) J = I + G

**J = 100 + 80**

W = S + (T – R)

W = -100 + 0.2 (Y – 30 + 20 ) + (30 – 20 )

W = -100 + 0.2 Y - 6 + 4 + 10

**W = - 92 + 0.2 Y**

இ) W = - 92 + 0.2 Y

0 = - 92 + 0.2 Y

Y = 92 / 0.2

Y = 460

ஈ)

W = - 92 + 0.2 Y


W = - 92 + 0.2 X 1360

W = 180

ஆகவே W = J

180 = 180

உ)




8)

1.

1. பேரினப்பொருளாதார உறுதியை மதிப்பிடுவதற்கு
2. பணத்தின் மெய பெறுமதியை மதிப்பிடுவதற்கு
3. பணவீக்கத்தினை மதிப்பிடுவதற்கு
4. மெய் உற்பத்தி, மெய் கூலி, மெய்வட்டி வீதம் போன்றவற்றை கணிப்பிடுவதற்கு
5. மக்களின் வாழ்க்கைத் தரத்தை கணிப்பிடுவதற்கு 04 புள்ளி

2.

| மொத்த விற்பனை விலைச் சுட்டெண் | உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் |
|---|---|
| அறிமுகம் 1977 | அறிமுகம் 2015 |
| அடியாண்டு 1974 | அடியாண்டு 2010 |
| மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டது | தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்படுகிறது |
| நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் விலைகள் ஆய்வுசெய்யப்பட்டது | வேளான்மை, தயாரிப்பு மற்றம் பயன்பாடு (மின்சாரம் மற்றும் நீர்) ஆகியவற்றின் விலைகள் ஆய்வுசெய்யப்படுகின்றது. |

04 புள்ளி

3. ஒரு நாட்டின் நிரம்பல் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக உற்பத்திச் செலவு அதிகரிப்பே அமைகின்றது என்றவகையில் இது செலவு தூண்டல் பணவீக்கம் என அழைக்கப்படுகின்றது. புள்ளி – 04

4.

1. நிலையான வருமானம் பெறுவோர்
2. சேமிப்போர்
3. கடன் கொடுத்தோர் 03 புள்ளி

5.

1. பணத்தின் மெய் பெறுமதி வீழ்ச்சியடையும்
2. நாணய மாற்று வீதம் வீழ்ச்சியடையும்
3. சென்மதி நிலுவை பாதக நிலையை அடையும்
4. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வீழ்ச்சியடையும்
5. சேமிப்பு குறைந்து முதலீடு குறைந்து பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும்

05 புள்ளி

9)

1. எந்தவித முதல் இழப்போ காலதாமதமோ இன்றி பணத்தினை உடனடியாக பிரிதொரு சொத்தாக மாற்றக் கூடிய பணத்தின் ஆற்றல் பணத்தின் திரவத்தன்மை எனப்படும். பணம் 100 வீதம் திரவத் தன்மை உடைய ஓர் சொத்தாகும்.

குறிப்பிட்ட ஓர் காலப்பகுதியில் மக்கள் தமது கைகளில் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு பணத்தின் திரவத்தோ்வு முன்னுரிமை எனப்படும். மக்கள் பணத்தினை வருமானம் உழைக்கும் சொத்துக்களில் முதலிடக்கூடியதாக இருந்தும் மக்கள் பணத்தினை

பணமாக தமது கைகளில் வைத்திருப்பதற்கு முன்னுரிமை வழங்கக் காரணம் பணத்தின் திரவத்தன்மையே ஆகும்.

ஓர் இழிந்த வட்டியில் பணத்துக்கான கேள்வி முடிவிலியாக இருப்பதே பணத்தின் திரவப்பொறிநிலை எனப்படும். வட்டிவீதம் வீழ்ச்சியடையும் போது மக்கள் தமது கைகளில் உள்ள பிணைகளை விற்று பணத்தினை பணமாக தமது கைகளில் வைத்திருப்பார்கள் அதாவது பினைகளுக்கான கேள்வியை குறைக்கும் அதேவேளை பணத்துக்கான குறிப்பிட் ஓர் இழிந்த வட்டியில் மக்கள் தமது பிணைகள் முழுவதையும் விற்று பணம் முழுவதையும் கைகளில் வைத்திருப்பார்கள் இதற்கு அப்பால் வட்டிவீதம் வீழ்ச்சியடையாது எனவே இந்த வட்டி வீதத்தில் பணத்துக்கான கேள்வி முடிவிலி நெகிழ்ச்சியாக காணப்படும்.

04 புள்ளி

2.

1. மெய்வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சி
2. வருமானம் பெறும் கால இடைவெளியில் ஏற்படும் வீழ்ச்சி
3. பொது விலைமட்டத்தில் ஏற்படும் வீழ்ச்சி
4. வட்டி வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சி
5. நிதி நிறுவனங்களின் வளர்ச்சி

04 புள்ளி

3.

அ)

ஒதுக்குப் பணம் = சட்டப்பணம் + வனிக வங்கியிடம் உள்ள ஒதுக்கு

= 400 + 200

= 600

ஆ)

$$\text{பணப்பெருக்கி} = \frac{\text{பணநிரம்பல்}}{\text{ஒதுக்குப்பணம்}}$$

$$\text{பணப்பெருக்கி} = \frac{2400}{600}$$

= 4

இ)

$$\text{பண அடித்தள மாற்றம்} = \frac{400}{4}$$

= 100

ஆகவே, 100 மில்லியன் ரூபா பெறுமதியான ஆவணங்களை கொள்வனவு செய்ய வேண்டும்

03 புள்ளி

4.

அ) மொத்த கேள்வி வைப்பு = ஆரம்ப வைப்பு X வைப்பு பெருக்கி

= 1000 X 5

= 5000

$$\text{தேவைப்படும் ஒதுக்கு} = \frac{20}{100}\ 5000$$

= 1000

02 புள்ளி

ஆ)

ஆகக் கூடிய கடண் = மொத்த வைப்பு – மொத்த ஒதுக்கு

= 5000 – 1000

= 4000

02 புள்ளி

இ)

| பொறுப்பு | | சொத்து | |
|---|---|---|---|
| மெத்த வைப்பு | 5000 | மொத்த ஒதுக்கு<br>கடண் | 1000<br>4000 |
| மொத்தம் | 5000 | மொத்தம் | 5000 |

02 புள்ளி

5.

1. வனிக வங்கிகள் மிகை ஒதுக்கினை வைத்திருக்க விரும்புதல்
2. கடனுக்கான கேள்வி குறைதல்
3. வங்கி முறைமைக்கு வெளியே பணப்பாச்சல் இடம்பெறுதல்
4. மக்கள் பணத்தினை தம்முடன் வைத்திருக்க விரும்புதல் 04 புள்ளி

10)

1. சந்தை விலைப்பொறிமுறையானது சமூக நீதி கருதி வளங்களை செயற்திறனாகவும் நீதியாகவும் ஒதுக்கீடு செய்யத் தவறுதல் சந்தைத் தோல்வி எனப்படும்.

01 புள்ளி

சந்தைத் தோல்விக்கு பிரதானமான 3 காரணங்கள்
1. வள ஒதுக்கீட்டில் செயற்திறனின்மை
2. வள ஒதுக்கீட்டில் நீதியின்மை

2. பேரினப் பொருளாதார உறுதியின்மை 03 புள்ளி

வேற்றுமை

| தனியார் பொருள் | பொதுப்பொருள் |
|---|---|
| நுகர்வில் போட்டிதன்மை உடையது | நுகர்வில் போட்டிதன்மை அற்றது |
| விலக்குதல் விதிக்கு உட்படும் | விலக்குதல் விதிக்கு உட்படாது |
| விலை காணப்படும் | விலை காணப்படாது |
| தனிநபர் உரிமை பாராட்ட முடியும் | தனிநபர் உரிமை பாராட்ட முடியாது |
| நுகர்வில் அமையச் செலவு உண்டு | நுகர்வில் அமையச் செலவு இல்லை |

03 புள்ளி

ஒற்றுமை

| தனியார் பொருள் | பொதுப்பொருள் |
|---|---|
| உற்பத்தியில் அமையச் செலவு உண்டு | உற்பத்தியில் அமையச் செலவு உண்டு |
| கூட்டாக நுகரலாம் | கூட்டாக நுகரலாம் |
| அரசு வழங்கும் | அரசு வழங்கும் |

03 புள்ளி

3.

1. வள ஒதுக்கீட்டில் செயற்திறனை ஏற்படுத்துதல்
2. வள ஒதுக்கீட்டில் நீதியினை ஏற்படுத்துதல்
3. பேரினப்பொருளாதார உறுதியை ஏற்படுத்துதல்
4. பொருளாதார சமூக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
5. பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஏற்படுத்துதல்
6. சட்டம் ஒழுங்குகளை நிலை நாட்டுதலும் நல்லாட்சி புரிதலும்
7. நிலைத்துநிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துதல் 06 புள்ளி

4.

1. பொதுப்பொருட்களை உற்பத்தி செய்து வளங்குதல்
2. பொதுவளங்களின் உடைமை உரிமையை உறுதிப்படுத்துதல்
3. நிறைவில் போட்டியை தவிர்த்தல்
4. வெளிவாரி விளைவுகளை கட்டுப்படுத்துதல்
5. சமூகநலப் பண்டங்களை அரசு தானே உற்பத்தி செய்து வழங்குதல்

04 புள்ளி